நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## S.T.C No. 1470/2024

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாந்தா |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னராஜ் |
| கிராமம் | : | தின்னப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 67 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.30AM)

1. நான் தற்போது உக்கம்பருத்திகாட்டில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்களுடைய தோட்டத்திற்கு அருகே குடியிருந்து வருகிறார். எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. இது குறித்து மேட்டூர் சிவில் நீதிமன்றத்தில்

வழ்கு நிலுவையில் இருந்து வருகிறது.

2. ஒரு வருடத்திற்கு முன்பு மாலை 5 மணி அளவில் எங்களுடைய மாட்டு தொழுவத்தில் மாட்டை கட்டிக் கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி அங்கு வந்த என்னை தேவடியா கண்டராஓலி என்று அருவருக்க தக்க கெட்ட வார்த்தையால் சொலல்ல முடியாத வார்த்தைகளாலும் என்னை திட்டினார். எதிரி என்னிடம் மாட்டை கட்டினால் என்னை தீர்த்து விடுவேன் என்னு மிரட்டினார். சம்பவம் நடந்த சமயத்தில் என்னுடைய கணவர் என்னுடன் இருந்தார். இது சம்பந்தமாக எழுத்து பூர்வமாக புகார் ஒன்றை காவல் நிலையத்தில் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்டையதுதான். புகார் அ.சா ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

1. எனக்கும் ஆஜர் எதிரிகுடும்பத்திற்கும் 10 வருடங்களாக தடம் வழி சம்பந்மான முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் எதிரி மீது மேட்டுர் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் அ.வ.எண். 110/2020 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரிதான். அதே நீதிமன்றத்தில் ஆஜர் எதிரி அ.வ.எண். 102/2020 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. எங்களது விவசாய நிலத்திற்கு பக்கத்தில் எனது கணவரின் தம்பி மணி என்பவரிடம் இருந்து ஆஜர் எதிரி கிரயம் வாங்கி உள்ளார் என்றால் சரிதான். அவர் 2006ம் வருடம் மேற்படி கிரயம் வாங்கிய ஆவணத்தில் எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் பொது பாதை இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பொது பாதையில் தான் நாங்களும் எதிரியும்போய் வருகிறோம் என்றால் சரிதான். அந்த பொது பாதையை நீதிமன்ற ஆணையர் வந்து அளந்தார் என்றால் சரிதான்.அளந்தது தவறு என்று நீதிமன்றத்தில் தவறு என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளோம்.

3. அந்த ஆணையர் அறிக்கையில் நாங்கள் தான் கம்பி வேலி போட்டு

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் தான் அந்த பொது வழியை கம்பி வேலி போட்டு அடைத்து விட்டோம் என்றால் சரியல்ல.

4. என்னை கெட்ட வார்த்தையால் திட்டிய தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் கொடுத்த புகாரில் பட்டா உள்ள 164 /2B நிலத்தில்தான் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்அந்த தேதியில் என்னை எதிரி எந்தவிதமான கெட்ட வார்த்தைகளாலும் திட்டவில்லை என்றால் சரியல்ல. கடந்த 18.02.2024–ஆம் தேதியன்று நானும் எனது கணவரும் வாழை மரத்துக்கு நெருப்பு வைத்ததாகவும் அதை தட்டிக் கேட்கும் போது தகாத வார்த்தைகளால் திட்டி அடிக்கடி தொந்தரவு செய்து வருவதாகவும் எங்கள் மீது கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு புகார் ரசீது எண் 44/2024 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. அந்த புகார் சம்பந்தமாக எங்களை கொளத்தூர் காவல் நிலையத்தில் போலீசார் விசாரித்தார்கள். விசாரிக்கும்போது எதிரியின் நிலத்தில் நாங்கள் அத்துமீறி நுழையக்கூடாது என்று எச்சரித்து அனுப்பினார்கள் என்றால் சரியல்ல.

5. சம்பவ இடத்தில் எங்கள் வீடு மற்றும் எதிரியின் வீட்டைத் தவிர வேறு எந்த வீடுகளும் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு குமார் மணிமேகலை ஆகியோர் அந்த இடத்தில் இல்லை என்றால் சரியல்ல அவர்கள் அன்று எங்களது தோட்டத்திற்கு வேலைக்கு வந்திருந்தார்கள். எதிரிக்குச் சொந்தமான குடிநீர் பைப் லைனை உடைத்து தொந்தரவு செய்தோம் என்றால் சரியல்ல. ஒரு தடத்தில் நாயை கட்டி வைத்தும் மாடு கட்டி வைத்தும் எதிரி அந்த வழியில் போகவிடாமல் தொந்தரவு செய்கிறேன் என்றால் சரியல்ல.

6. 2011 முதல் 2016–ஆம் ஆண்டு வரை கொளத்தூர் ஒன்றிய குழு தலைவராக நான் பதவி வகித்தேன் என்றால் சரிதான். எனக்கு அரசியல் பலம் இருப்பதால் எங்கள் நிலத்துக்கு பக்கத்தில் இருக்கும் எதிரியின் பூமியை குறைவான விலையில் கேட்கிறோம் என்றாலும் அதற்காகத்தான் அவர் மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல. தனியாக இருக்கும் எதிரி குஞ்சப்பனை நாங்கள் மிரட்டி வருகிறோம் என்றால் சரியல்ல. அவர்கள் ஏழு நபர்கள் இருக்கிறார்கள். நான் சொன்னவாறு போலீசார் யாரும் என்னை

விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–11.56PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**S.T.C No. 1470/2024**

**P.W. 2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சின்னராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | நாச்சியப்பகவுண்டர் |
| கிராமம் | : | தின்னப்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 72 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.59AM)

1. நான் பாப்பான்காடு என்ற இடத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா 1 என்னுடைய மனைவி. ஆஜர் எதிரி என்னுடைய தோட்டத்திற்கு அருகே குடியிருந்து வருகிறார். எங்களுக்கும் எதிரிக்கும் நிலப்பிரச்சினை இருந்து வருகிறது. இது சம்பந்மாக மேட்டுர் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது.

2. ஒரு வருடத்திற்கு முன்பு மாலை 5.30 மணி அளவில் எங்களுடைய நிலத்தில் என்னுடைய மனைவி மாடு தொழுவத்தில் மாட்டை கட்டி கொண்டு இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி எனது மனைவியை பார்த்து தேவடியா கண்டார ஓலி என்று கெட்ட வார்த்தையால் அருவருக்க தக்க வகையில் பேச கூடாத வார்த்தையால் திட்டினார். மேலும் எங்களை ஓட ஓட விரட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். நான் சம்பவ இடத்தில் என் மனைவியுடன் தான் இருந்தேன்.

3. சம்பவத்தின் போது எங்களது காட்டில் வேலை செய்து கொண்டிருந்த குமார், மற்றும் மணிமேகலை மற்றும் ஒருவர் இருந்தனர். இது சம்பந்தமாக எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை.

1. போலீசார் என்ன தேதியில் என்னை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை 24 ஆம் தேதி என்று நினைக்கிறேன். எனது மனைவி 23.06.2024–ஆம் தேதி புகார் கொடுத்தார். கொடுத்ததில் எனது பட்டா நிலத்தில் மேற்கண்டவாறு

திட்டியதாகத்தான் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் எதிரியை திட்டியதாகவும் கொளத்தூர் காவல் நிலையத்தில் ஒரு புகார் மனு பெற்றுக் கொள்ளப்பட்டு ரசீது கொடுத்துள்ளனர் என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை என்னை அது பற்றி விசாரிக்கவில்லை.

2. எங்களையும் எதிரியை மறைத்து நாங்கள் பொது இடத்தை ஆக்கிரமித்து இடையூறு செய்து வருவதாகவும் அவ்வாறு செய்யக்கூடாது என்று எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தார்கள் என்றாலும் சரியல்ல. எதிரி நிலத்தை வாங்கும் போது அதில் 12 அடி பொது தடம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எதிரி வாங்கி கிரைய பத்திரத்தில் அவ்வாறு எதுவும் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எதிரி வாங்கிய கிரைய பத்திரத்தில் மேற்படி பொது தடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அந்த தடத்தை ஆக்கிரமித்து தான் இந்த பொய் புகாரை கொடுத்துள்ளோம் என்றாலும் சரி இல்லை. இது சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வருகிறது.

3. மேற்படி வழக்கு நடவடிக்கையின் போது நீதிமன்ற ஆணையர் வந்து அளந்து வரைபடம் தயார் செய்தார் என்றால் சரிதான். அந்த வரைபடத்தை நான் பார்க்கவில்லை. அந்த வரைபடத்தில் எதிரி நிலத்தை தான் நாங்கள் கம்பி வேலி போட்டு அடைத்து விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அந்த நிலம் என்னுடைய பட்டா நிலம்.

4. அந்த இடத்தில் தான் மாட்டு தொழுவம் உள்ளது என்றால் சரியல்ல. எனது மனைவி அவரை கெட்ட வார்த்தைகளால் எதிரி திட்டியதாக

சொல்வது பொய் என்றாலும், எனது மனைவி அண்ணா திமுக கட்சியில் சேர்மன் ஆக பதவி வகித்ததாலும், குஞ்சப்பன் உடைய நிலத்தை குறைந்த விலைக்கு நாங்கள் அடிக்கடி விளக்கு கேட்டு தொந்தரவு செய்து வருகிறோம் என்றாலும் அதற்கு எதிரி மறுத்து விட்டதால் இந்த பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல.

5. எதிரியின் நிலத்துக்கு செல்லும் குடிநீர் இணைப்பு தண்ணீர் குழாயை ஆகியவற்றை உடைத்து சேதப்படுத்தி விட்டோம் என்றாலும் பொதுத்தடத்தில் மாட்டை கட்டி வைத்துள்ளோம் என்றாலும் நாயை கட்டி வைத்து தொந்தரவு செய்கிறோம் என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவத்தன்று தோட்டத்தில் குமார் மணிமேகலை ஆகிய இருவரும் உண்மையில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் காவல் துறையினர் வந்து எங்களை விசாரிக்கவில்லை என்றாலும் பொய்யான புகார் அளித்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.15PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**

7. **நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**